**Starting Time: 01.30 P.M.**

# **IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 351/2002**

Deposition of **P.W.4** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 03.03.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : திருவெங்கடேசன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**சாட்சிக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பபப்பட்டதின் பேரில், சாட்சி ஆஜராகி வாதி தரப்பில் முதல் விசாரணை** : நான் தற்சமயம் பட்டுத்துறை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் வட்டாட்சியரின் அனுமதியுடன், ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் சம்மந்தமாக வட்டாட்சியர் அளித்த 03.03.2023 தேதியிட்ட கடிதம் **Ex.X1** ஆகும். 'அ' பதிவேட்டின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **Ex.X2** ஆகும். சர்வே எண் 72-க்கான புலவரைப்படத்தின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **Ex.X3** ஆகும். பசலி எண் 1432-க்கு, சர்வே எண் 72/3-க்கான அடங்கல் பதிவேட்டின் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **Ex.X4** ஆகும். கணினி 'அ' பதிவேடு தாக்கல் செய்கிறேன். அது **Ex. X5** ஆகும்.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** சர்வே எண் 72/14, 72/15, 72/17-ல் உள்ள சொத்துக்கள் ஆறுமுகம், மணி, பெரியசாமி என்பவர்கள் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களில் பதிவேடு எதுவும் உள்ளதா என்றால், 72/3-ல் உள்ள ஹெக்டேர் 5.29.0 விஸ்தீரண சொத்து, 72/4 முதல் 72/17 வரையாக

உட்பிரிவு செய்யப்பட்டிருந்தது, அதை மாவட்ட ஆட்சியர் ரத்து செய்துவிட்டு, மீண்டும் 72/3 என மாற்றம் செய்யப்பட்டு அந்த சொத்தானது கிராம கணக்கில் ஓடை என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண் 72/3-ல் உள்ள சொத்து உட்பிரிவு செய்யப்பட்டதாகவும், அதில் 72/14, 72/15, 72/17-ல் உள்ள சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இருப்பதாக சொல்வது உண்மையா என்றால், 72/14, 72/15, 72/17 என்ற உட்பிரிவுகளே நடைமுறையில் இல்லை. அந்த சொத்துக்கள் 72/3-என உள்ளது, அதில் வாதிகள் யாரும் அனுபவத்தில் இல்லை.

2. 72/3-ல் உள்ள சொத்து தீர்வை ஏற்பட்ட தரிசு நிலம் என மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை, அந்த சொத்து ஓடையாகவே உள்ளது. அடங்கல் பதிவேட்டிலும் 72/14, 72/15, 72/17-ல் உள்ள சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்தில் இருப்பதாக பதிவு இல்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள Ex.X4 அடங்கல் பதிவேட்டில் வாதிகள் பெயர் எதுவும் உள்ளதா என்றால், இல்லை.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பு மறுவிசாரணை இல்லை.

Ending time: 01.54 P.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**